19

# திருக்குறள் – நட்பு

இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும், பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறை முகத்தானும் கூறுவான் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். அஃதாவது இன்னது என்பதூஉம் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

**1. செயற்குஅரிய யாவுளநட்பின் அதுபோல்**
**வினைக்குஅரிய யாவுள காப்பு**

நட்பின் செயற் அரிய யாஉள - நட்புப்போலச் செய்து கோடற்கு அரிய பொருள்கள் யாவை உள?, அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள் - செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப்புகற்கு அரதிய காவலாவன யாவை உள?

நட்புச்செய்தற்கு ஆவாரைப் பெறுதலும், பெற்றால் செய்யும் உபாயமும், செய்தால் திரிபின்றி நிற்றலும் முதலிய அரிய ஆகலின், நட்பின் செயற்கு அரியன 'இல்லை' என்றும், செய்தால் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின் 'அதுபோல வினை வாராமைக்கு அரிய காவல் இல்லை' என்றும் கூறினார். நட்புத்தான் இயற்கை செயற்கை என இருவகைப்படும். அவற்றுள், இயற்கை பிறப்பு முறையானதும், தேயமுறையானதும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலின், அது 'சுற்றந்தழா'லின் அடங்கிற்று; ஏனையது பகையிடையிட்ட தேயத்ததாகலின், அது துணைவலி என வலியறிதலுள் அடங்கிற்று. இனி, ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்த உதவி பற்றிவருஹ் செயற்கைசூய யாகலின், அதன் சிறப்பூ இதனான் கூறப்பட்டது.

கருத்துரை: நட்புப்போல் செய்துகொள்ளத் தக்கவும், அதுபோல் செயலுக்குக் காவலனாக ஆகிய அரிய போருள்கள் எவை உள?

**2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையார் நட்பு.**

நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையுந்தன்மைபோல நாள்தோறும் நிறையுந் தன்மையவாம்; பேதையார் நட்பு மதிப்பின் நீர - மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்த மதி பின் குறையுந் தன்மைபோல நாள்தோறும் குறையுந் தன்மையவாம்.

'நீரவர்' என்றார், இனிமைபற்றி. கேண்மை, நட்பு என்பன ஒரு பொருட்கிளவி. செய்தாரது பன்மையான நட்பும் பலவாயின அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்தன முன்சுருங்கியப் பின் பெருகற்கும். பேதையாரும் பேதையாரும் செய்தன முன் பெருகிப் பின் சுருங்கற்கம காரணம் தம்முள் முன் அறியாமையும் பின் அறிதலும் ஆம்.

கருத்துரை: அறிவுடையார் நட்புப் திறைமதிபோல் வளர்ந்து வரும், அறிவில்லாதவர் நட்டுழத் தேய்பிறைபோல் குறைந்து கொண்டே போகும்.

**3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடையாளர் தொடர்பு.**



இலவச விநியோகத்திற்காக

பண்பு உடையாளர் தொடர்பு பயில் தொறும் - நற்குணமுடைய மக்கள் தம்முள் செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கு இன்பஞ்செய்தல், நூல் நவில் தொறும் நயம் போலும் - நூற்பொருள் கற்குந்தோறும் கற்றார்க்கு இன்பஞ்செய்தலை ஒக்கும்.

நயத்தினைச் செய்தலான் 'நயம்' எனப்பட்டது. இருமையினும் ஒரு காலைக்கு ஒரு கால் மிகும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அச்சிறப்பிற்கு ஏது கூறப்பட்டது.

**கருத்துரை:** நூற்பொருள் கற்குந்தோறும் இன்பம் அளிப்பதைப்போல் நல்ல குணமுடையவர் நட்புப் பழகுந்தோறும் இன்பம் தரும்.

**4. நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

நட்டல் நகுதற்பொருட்டன்று - ஒருவனோடு, ஒருவன் நட்புச் செய்தல் தம்முள் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு - அவர்க்கு வேண்டாத செய்கை உளதாய வழி முற்பட்டுக் கழறுதற் பொருட்டு.

பழியும் பாவமுந் தரும்செய்கை துன்பமே பயத்தலான் வேண்டப்படுவதன்மையின், அதனை 'மிகுதி' என்றும், அது செய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் 'மேற்சென்று' என்றும், இச்சொற்கு மீளாமையின் 'இடித்தற்பொருட்டு' என்றும் கூறினார். இதனான் நட்பின் பயன் கூறப்பட்டது.

**கருத்துரை:** நட்புச் செய்வது இருவரும் சிரித்துப் பொழுது போக்குவதற்கு அல்ல. தவறான செயல் செய்யும் போது முற்பட்டு இடித்துரைப்பதற்காகும்.

**5. புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.**

புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனோடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை. உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் - இருவருக்கும் ஒத்த உணர்ச்சிதானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும்.

புணர்ச்சி: ஒரு தேயத்தாராதல்; "இன்றே போல்க நும்புணர்ச்சி" (புறம் 58) என்றதும் அதனை பழகுதல்; பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ் இரண்டும் இன்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சியொப்பின், அதுவே உடன் உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம். (புறம் 217). நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என்னும் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்து என்பது இதனால் கூறப்பட்டது.

**கருத்துரை:** ஒருவனுடன் ஒருவன் நட்பாவதற்குத் தேச ஒற்றுமையும் பழக்கமும் வேண்டாம். இருவர் மனம் ஒத்த உணர்ச்சியே நட்பு என்ற உரிமையைக் கொடுக்கும்.

**6. முகம்நக நட்பது நட்புஅன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.**

முகம் நக நட்பது நட்பு அன்று - கண்ட வழி அகமொழிய முகமாத்திரமே மலரும் வகை நட்குமது நட்பாகாது; நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு - அன்பால் அகமும் மலர நட்குமதே நட்பாவது.

நெஞ்சின்கண் நிகழ்வதனை 'நெஞ்சு' என்றார். இறந்தது தழீஇய எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. இதனான் இரண்டும் ஒருங்கே மலரவேண்டும் என்பது பெற்றாம்.

**கருத்துரை:**கண்டபோது முகம் மலர நட்பது நட்பு அல்ல. அன்பினால் உள்ளமும் மலர நட்பதே நட்பு ஆகும்.

**7. அழிவி னவை நீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு**

அழிவினை நீக்கி ஆறு உய்த்து - கேட்டினைத்தரும் தீ நெறிகளைச் செல்லுங்கால் விலக்கி, ஏனை நன்னெறிகளைச் செல்லாக்காற் செலுத்தி, அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பாம் - தெய்வத்தால் கேடுவந்துழி அது விலக்கப்படாமையின் அத்துன்பத்தை உடன் அனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது.

'ஆறு' என வருகின்றமையின் 'அழிவினைத் தருமவை' என்றொழிந்தார். ''தெருண்ட அறிவினவர்''(நாலடி 301) என்புழிப்போல இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. இனி 'நவை' என்று பாடம் ஓதி, அதற்குப் போர் அழிவினும் செல்வ அழிவினும் வந்த துன்பங்கள் என்றும், 'அழிவின் கண்' என்பதற்கு 'யாக்கை அழிவின்கண்' என்றும் உரைப்பாரும் உளர்.

கருத்துரை: தவறான வழிகளில் செல்லும் போது தடுத்து, நல்ல வழிகளில் நடக்கச் செய்து, துன்பம் வந்த போது உடனிருந்து அதை அனுபவிப்பதே நட்பு.

**8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

உடுக்கை இழந்தவன் கை போல - அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்று உதவி அவ்விளிவரல் களையுமாறு போல, ஆங்கே இடுக்கண் களைவது நட்பாம் - நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்று உதவி அதனைக் களைவதே நட்பாவது.

அற்றம் காத்தற்கண் கை தன் மனத்தினும் முற்படுதலின், அவ்விரைவு இடுக்கண் களைவுழியும் அதற்கு ஒத்த தொழிலுவமையினும் வருவிக்க. உடையவன் தொழில் நட்பின்மேல் ஏற்றப்பட்டது.

கருத்துரை: ஆடை குலைந்தவன் கை அப்பொழுதே சென்று உதவிக் காப்பதைப் போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது விரைந்து சென்று அதைப் போக்குவதே நட்பு ஆகும்.

**9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின், கொட்புஇன்றி**
**ஒல்லும் வாய் ஊன்றும் நிலை.**

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் - நட்பிற்கு அரசிருக்கை யாதெனின், கொட்பு இன்றி ஒல்லும் வாய் ஊன்றும் நிலை - அஃது எஞ்ஞான்றும் திரிபின்றி இயலும் எல்லை எல்லாம் அறம் பொருள்களில் தளராமைத் தாங்கும் திண்மை.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமைஇம்மைகட்கு உறுதியாய அறம் பொருள்களில் தளர்ந்துழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின் கண் நிறுத்துதற்கு மேல் ஒரு செயலும் இன்மையின், அதனை நட்பிற்கு முடிந்த எல்லை என்றார்.

கருத்துரை: நட்பிற்குச் சிறந்த அரசிருக்கையாவது, எக்காலத்தும் மாறுபடுதல் இல்லாமல், அறம் பொருள்களில் தளராமல் தாங்கும் திண்மை ஆகும்.

**10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**

இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் - இவர் நமக்கு இத்துணையன்பினர் யாம் இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரையொருவர் புனைந்து சொல்லினும், நட்புப்புல்லென்னும் நட்புப் புல்லிதாய்த் தோன்றும்.

இவர்க்கு என்பது வருவிக்கப்பட்டது. தாம் அவர் என்னும் வேற்றுமையின்றி வைத்துப் புனைந்துரைப்பினும் வேற்றுமையுண்டாம் ஆகலின், 'நட்புப் புல்லென்னும்' என்றார். இவை ஐந்துபாட்டானும் நட்பினது இலக்கணம் கூறப்பட்டது.

கருத்துரை 'இவர் எமக்கு இத்துணை அன்பினர்' 'யாம் இவர்க்கு இத்தன்மையம்' என்று புனைந்துரைப்பினும் நட்புச் சிறிதாகிவிடும்.



இலவச விநியோகத்திற்காக